## <u>மேட்டூர் சார்பு நீதிமன்றம்</u>

| O.S. No. 85/2019 | Date : 23.01.2024 | DW1 |
|---|---|---|
| Name: கிருஷ்ணம்மாள் | W/o. **கந்தப்பன்** | |
| Evidence Recorded Time: 12.06 P.M. to 12.50 P.M | | |

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது. என்ன சர்வே எண்ணில் வாதிக்கு உரிமை உள்ளது என்றும், எவ்வளவு விஸ்தீரணம் என்று தெரியுமா என்றால் தெரியாது. துரைசாமி பெயரில் உள்ள நிலமும் மற்ற 5 ஏக்கர் நிலங்களும் ரயில்வே நிலம் என்றால் தெரியாது. கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்பே அதனை அகிலா ராமன் என்பவர் ஏலத்தில் எடுத்து தனது அனுபவத்தில் வைத்திருந்தார் என்றால் சரிதான். அகிலாராமனிடமிருந்தோ அல்லது அவர்களது வாரிசுகளிடமிருந்தோ நானோ என் கணவரோ, வழக்கில் சொல்லியுள்ள சேவியோ, அம்மாசியோ கிரையம் வாங்கினோமா என்றால் இல்லை. ஆர்.கே.ராமன், ஷேசாயி, கமலாமூர்த்தி ஆகியோரை தெரியுமா என்றால் தெரியும். அவர்கள் அகிலாராமனின் வாரிசுகள் என்றால் சரிதான். ஆர்.கே.ராமன், ஷேசாயி, கமலாமூர்த்தி ஆகியோர் சேர்ந்து 08.10.1993-ல் அறிவுக்கொடி என்பவருக்கு பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி பொது அதிகார பத்திரம் சென்னை பெரியமேடு சார் பதிவாளர் அலுவலகத்தில் முறையாக பதிவு செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி ஆர்.கே.ராமன், ஷேசாயி, கமலாமூர்த்தி எழுதிக்கொடுத்த பொது அதிகார பத்திரத்தின் படி அறிவுக்கொடி வாதிக்கு ஒரு கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது பொய்யாகும், அந்த சமயத்தில் அவர்கள் ஊரிலேயே இல்லை. ஆர்.கே.ராமன், ஷேசாயி, கமலாமூர்த்தி ஆகியோர் பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுக்கவில்லை என்று காவல் துறையில் புகார் கொடுத்துள்ளார்களா என்றால் புகார் கொடுக்கவில்லை, அவர்கள் நிலம் வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். என்னிடமோ, சேவி, அம்மாசியிடமோ நிலம் வேண்டும் என்று சொல்லி நிலத்தை கொடுத்துவிட்டு சென்றுவிட்டார்களா என்றால் இல்லை. இன்றைய தேதி வரையிலும் ராமன் வகையறாவினர் எழுதிக்கொடுத்த பொது அதிகார பத்திரத்தை

பொறுத்து எந்த விதமான ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். சேவியும், அம்மாசியும் அறிவுக்கொடியிடம் 2001–ல் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என்னுடைய வாக்குமூலத்தில் அறிவுக்கொடி மேட்டூர் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண்.1965/2009–ன் படி 1091 1/4 சதுரடி நிலத்தை கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்று சொல்லியுள்ளேன் அதுபற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய வாக்குமூலத்தில் அறிவுக்கொடி மேட்டூர் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண்.1966/2009–ன் படி 1091 1/4 சதுரடி நிலத்தை வாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்று சொல்லியுள்ளேன் அதுபற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சேவிக்கவுண்டர் மகன் காவேரிக்கு 1091 1/4 சதுரடி நிலத்தை 09.01.2010–ல் கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்று சொல்லியுள்ளேன் அதுபற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் பிரமாண பத்திரத்தில் சொல்லியுள்ள ஆவணங்களின் நகல் போட்டு பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. அதனால் எனக்கு யார் யாருக்கு கிரையம் செய்து கொடுத்தார்கள் என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். ஆவணங்கள் பற்றி முழுமையாக தெரியாமலேயே நான் ஆவணங்கள் சரியில்லை என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல, குடியிருக்கும் சாலையில் இருப்பதால் அதனை தவறு என்று சொல்கிறேன். நான் சொல்வது தவறு என்றாலும் வாதி முறையாகதான் கிரையம் பெற்றுள்ளார் என்றாலும் அதன்படி முறையாக அனுபவத்தில் உள்ளார் என்றாலும் சரியல்ல. வாதி என்ன வீடு கட்டியுள்ளார் என்றால் ஓட்டு வீடு கட்டியுள்ளார். வாதியின் வீட்டிற்கும் என் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் 10 அடி தூரம் இருக்கும். வாதியின் வீட்டிற்கு ஒட்டினாற் போல வடக்கு பக்கம் என் வீடு உள்ளது. என்னுடைய வீடு மெத்தை வீடு என்றால் இல்லை அது என் மகள் ஈஸ்வரியின் வீடு ஆகும். ஈஸ்வரி யாரிடம் கிரையம் பெற்றார் என்றால் அகிலாராமனிடம் கிரையம் பெற்றார். என் மகளுக்கு தற்போது என்ன வயது என்றால் 54 வயதாகிறது. அகிலா ராமன் எப்போது இறந்தார் என்றால் சுமார் 30, 40 வருடங்கள் இருக்கும். அகிலா ராமனிடம் என் மகள் எந்த வருடம் கிரையம் பெற்றார் என்பதற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது. எனது குடிசை வீட்டிற்கும், எனது மகள் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் 5 அடி தூரம் இருக்கும். எனது மகள் ஈஸ்வரியின் மெத்தை வீடு வாதியின் வீட்டிற்கு கிழக்கு பக்கம்

10 அடி துாரத்தில் உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பதிலுரையிலோ, எனது வாக்குமூலத்திலோ எனது மகள் அகிலாராமனிடம் இடம் வாங்கிய விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். எனது கூரை வீடு இருப்பதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது வீட்டின் கதவு எண் உள்ளதா என்றால் என் வீட்டிற்கு கதவு இல்லை. சுவர் வைத்து எனது வீடு கட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை. சுவர் இல்லாமல், கதவு இல்லாமல் உள்ள வீட்டிற்கு வரி செலுத்தி வருவதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. அந்த வீட்டில் யாரும் குடியில்லை என்றால் சரிதான், அங்கு புதராக உள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல அந்த இடத்தில் வீடோ, குடிசை வீடோ எதுவும் இல்லை என்றாலும், நான் என் மகளின் வீட்டில்தான் வசித்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. வாதி தாவா சொத்தில் வீடு கட்டியது முதல் அங்குதான் தனது அப்பாவுடன் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். வாதியின் வீட்டிற்கு வீட்டு வரி ரசீது, மின் இணைப்பு ஆகியவை முறையாக உள்ளது என்றால் சரிதான். வாதி கிரையம் பெற்று அனுபவத்து வரும் சொத்தில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் வாதி எவ்வளவு சொத்துக்களை கிரையம் வாங்கியுள்ளார் என்று எனக்கு தெரியாது, அந்த வீட்டை அவர் வாடகைக்கு விட்டுள்ளார். வாதி எத்தனை வருடங்களாக வீட்டை வாடைக்கு விட்டுள்ளார் என்றால் வீடு கட்டியது முதல் வாடகைக்கு விட்டுள்ளார். ஈஸ்வரிக்கு பாத்தியப்பட்ட வீட்டில் யார் குடியிருக்கிறார்கள் என்றால் நான் கடந்த இரண்டு வருடங்களாக அந்த வீட்டின் ஒரு பகுதியில் குடியிருந்து வருகிறேன், மற்றொரு பகுதி வாடகைக்கு விடப்பட்டுள்ளது. வாதிக்கு பாத்தியப்பட்ட வீட்டில் தற்போது யார் குடியிருந்து வருகிறார்கள் என்றால் அன்பு என்பவர் குடியிருந்து வருகிறார். அன்பு எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் உள்ளூரை சேர்ந்தவர் ஆவார். அசல் வழக்கு எண்.745/1985 என்ற வழக்கை அகிலா ராமன் தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியும் 50 வருடங்களுக்கு முன்பு போட்டார். மேற்படி வழக்கு என்ன ஆனது என்றால் தெரியாது, அகிலா ராமன் ஆளுக்கு 1 1/2 செண்ட் நிலம் தருவதாக கூறினார். அவர் சொன்னது போல நிலத்தை கொடுத்தாரா என்றால் இல்லை. உரிமையாளர் என்ற முறையில் அகிலா ராமனுக்கும், அவர் இறந்த பிறகு அவருடைய வாரிசுகளுக்கும் தான் சொந்தம் என்றால் சரிதான். அகிலா ராமன் இறந்த பின்னிட்டு

அவருடைய வாரிசுகளை சென்று கேட்டார்கள், இடத்தை வைத்துகொள்ளுங்கள் என்று கூறிவிட்டார்கள். கே.ஆர்.கோவிந்தன் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் நிறைவேற்று மனு தாக்கல் செய்தார் என்று கூறியுள்ளேன், அதுபற்றி தெரியுமா என்றால் தெரியும். நீதிமன்றத்தில் தீர்ப்பு பெறப்பட்டதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனக்கு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு பற்றி அதில் என்ன சொல்லியுள்ளார்கள் என்று நேரடியாக தெரியாது என்றால் தெரியாது, வழக்கு தள்ளுபடி ஆனதாக சொன்னார்கள். என்னுடைய வாக்குமூலத்தில் சேவி, சேவிக்கவுண்டர் மகன் அம்மாசி ஆகியோர் வீடு கட்டி அனுபவத்தில் இருந்து வந்ததாகவும், பின்னிட்டு 2010–ம் ஆண்டு அறிவுக்கொடி என்பவரிடமிருந்து முனுசாமி மகன் சேவி, சேவிக்கவுண்டர் மகன் காவேரி, வாதி உள்ளிட்டோர் கிரையம் பெற்றிருப்பதாக சொல்லியுள்ள சங்கதி முன்னுப்பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் உண்மையான உரிமையாளரான அகிலா ராமனின் வாரிசுகள் அறிவுக்கொடி என்பவருக்கு எழுதி வைத்த பொது அதிகார ஆவணத்தை வைத்து மேற்படி அறிவிப்பு படி வாதி, சேவி, காவேரி உள்ளிட்டோருக்கு முறையாக கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்பதால் அதனை பொறுத்து கேள்வி கேட்க எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. 2019–ம் ஆண்டு வாதியிடம் சென்று தாவா சொத்தை கொடுக்குமாறு கேட்டேன் என்றால் சரியல்ல. வாதியிடம் சொத்தை விலைக்கு கேட்டதாலும் வாதியின் அனுபவத்திற்கு தொந்தரவு செய்ததாலும் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றாலும், வாதி கோரியவாறு வழக்கில் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வழங்கவேண்டும் என்றாலும் சரியல்ல. நான் வாதிக்கு தொந்தரவு கொடுக்க உரிமை இல்லை என்றாலும் இல்லாத குடிசையை இருப்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

<u>மறுவிசாரணை –</u> இல்லை.

ஒம்/–DW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.